(ஆ) விதி 22-ஐ, 29-3-79-க்கு தளர்த்துவது குறித்து.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணிநேரம் 'வினாக்கள்-விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ, 29-3-1979 அன்று தளர்த்தி அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 29-3-1979 அன்று காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(10) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 95. தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வி பற்றிய சிறு புத்தகம், மார்ச் 1979—கல்வித் துறை (தமிழ், ஆங்கிலம்).

*96. கோரிக்கை எண் 20—வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

*97. 1979-80 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறைக்கான செயல் வினைமுறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

*98. 1979-80 ஆம் ஆண்டில் பாசனம், நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

**99. பாசனம் மீதான 1979–80 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு, விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

**100. 1978-79 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் மீதான வேளாண்மைத் துறையின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

---

*25–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

**26–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS